Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூக] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஆடிமீ ௩௨ உ வெள்ளிக்கிழமை (16 AUGUST 1957) [இல-கக]

# உடன்பாட்டை மெச்சி உபதேசித்தவர்கள் எங்கே....?

## காஞ்சிரங்காய்க்குக் காதற்பட்டு கரணம் போட்டார்களே!

## நரி பரியாகிப்பின் நரியாகிய நாடகம்!!

கிட்லருக்கும் ஸ்ராலினுக்கும் 1939ம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் உருவானபொழுது "நடக்க முடியாத காரியம்" என்று உலகம் ஆச்சரியப்பட்டது. போலந்தைப் பங்கிடுவதற்கு அந்த ஒப்பந்தம் பொருத்தாயமைந்தது. பின் ஒருவர் மீதொருவர் பாய்ந்து உலகமும் யுத்தத்தால் உபத்திரவப்பட்டது. இது கட்டுக்கதையல்ல!

இலங்கையில் 1957ம் ஆண்டு ஒரு ஒப்பந்தமாம்-உடன்படிக்கையாம். அதை உருவாக்கினவர்களுக்கே உள்ளக் கிடக்கை என்ன என்று தெரியாதாம். ஆனல் இருபகுதியாரும் ஒப்பந்தத்தை ஊர் ஊர் ஆகச் சென்று உச்சிமேல் வைத்து மெச்சிப் பேசி ஊரவர்களின் கரங்களையும் மிகவும் சிரமப்படுத்திவிட்டார்கள். விடிந்தாற் றெரியும் என்று சொல்வார்களே—அப்படியுமல்ல. விடிவதற்கு முன் விளக்கம் வெளியாகிவிட்டது.

மரக்குதிரையா மண் குதிரையா? மாயக் குதிரையா? மட்கோட்டை கட்டினர்களா? மனக் கோட்டை நிறுவினர்களா? அரசியல் நரி பரியாய் வேடம் போட்டுப்பின் பழையபடி நரியாய்விட்டது எல்லாம் ஒரு திங்களுக்குள்ளே.

கண்ணுங் கண்ணும் ஒன்றாய்க் கூடி எண்ணமும் எண்ணமும் ஒரு வண்ணமாய் நிகழ்ந்துவரும் காதற் சம்பவங்களிலும் அந்த உறவு காற்றாய்ப் பறந்து விடுவது சகசமாகும். இக்காலத்தில் கண்கள் மாறு நோக்கி எண்ணங்கள் வேறாய் நின்ற பிரதமர்-சமஷ்டியினர் பிரேமை வேற்றுமைப்படுவது நூதனமல்ல.

பிரதமர் பெருவிளக்கம் கொடுத்துவிட்டார். தனிச் சிங்களச் சட்டம் சட்டந்தான். தமிழ் ஒரு மொழிதான்; பிரதேச சபைகள் வருவது உண்மைதான். பிரத்தியேகவுரிமை அவற்றுக்கில்லை. குடியேற்றும் உரிமையை மந்திரியார் கைவிடமாட்டார் என்பதும் உண்மைதான். பாராளுமன்றத்தின் பரிபூரணத் தத்துவம் அரை இம்மியளவாவது பறிக்கப்படவில்லை என்பதுவும்உண்மைதான்.

இந்த மகாவியாக்கியானம் அடங்கிய சுலோகத்தை இயற்றுவதற்கு கோரக்கொல்லை (Horagolla) யிலா கூட வேண்டும்? கை கொடுத்துப் புது நட்புக் கொண்டாடவேண்டும்?

இந்த வரம் பெறுவதற்கு அந்த இடம் செல்லவேண்டுமா? சிங்கக் கொடியை வணக்கஞ்செய்து தொங்கவிட வேண்டுமா? நல்ல காலம் வருகின்றது நம்புங்கள் நம்புங்கள் என்று நாட்டிலே மக்களுக்குச் சொல்ல வேண்டுமா?

## ஆடிவேல் உற்சவம்

### வழக்கமானமுறையில் நடந்து மகிழ்வளித்த காட்சி

தனிச்சிங்களச் சட்டம் வந்தமையால் உண்டான குழப்பங்களால் சென்ற ஆண்டு வழக்கம்போல் ஆடிவேல் உற்சவம் நடத்த முடியவில்லை. நிலைமை மாறியமையால் இந்த ஆண்டு எல்லாம் மிகச் சிறப்பாக வழக்கம்போல் நடைபெற்றமை மக்களுக்கு மிகுந்த மகிழ்வளித் திருக்கின்றது.

சென்ற வியாழக்கிழமை இன்பகரமான சூழ்நிலையில் ஆடிவேல்விழா ஆரம்பமாயது. பாதுகாவலர் பகுதித் தலைவர் முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக முதலிய அரசாங்க அதிகாரிகள் சுப்பிரமணியப் பெருமானை வழிபட்டுப் பிரசாதம் பெற்றனர்.

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை மாணிக்க விநாயகராலயத்திலிருந்தெழுந்தருளி,கடற்கரைத் தெரு செட்டியார் தெரு முதலிய வீதிகளால் திருவுலாப் போந்து திங்கட்கிழமை காலையில் தமது திருக்கோயிலை யடைந்தருளினர்.

கொழும்பு செட்டியார் தெரு பழைய கதிரேசன் கோயில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திங்கட்கிழமை மாலை வெள்ளவத்தையிலிருந்தெழுந் தருளிச் செவ்வாய்க்கிழமை காலையில் தமது திருக்கோயிலை அடைந்தருளினர்.

திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று நிறைவுற்றமை அடியார் உள்ளங்களில் ஒப்பற்ற மகிழ்ச்சியை உண்டுபண்ணியுள்ளது.

### உத்தர கிரியை

திருமயிலை சைவப்பெரியாரும் சைவத் தொண்டருமாகிய திரு. சே. வெ ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களது பாரியாரும் அடியார் பக்தியிற் சிறந்த மாதரசியுமாகிய ஸ்ரீமதி.கமலாம்பாள் அம்மையாரவர்கள் சிவபதமடைந்த 16-ம் நாளாகிய 1-8-57-ல் திருமயிலையில் உத்தர கிரியைகள் சிறப்பாக நடைபெறலாயின. அரன் அருளால் அம்மையார் ஆன்மசாந்தி அடைவாராக.

### ஸ்ரீமத் விபுலானந்தர் நினைவுச் சின்னம்

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலத்தில் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்களின் நினைவுச் சின்னமாய் அமைக்கத் தொடங்கிய விபுலானந்த மணிமண்டபத்தைப் பூர்த்தியாக்கவும் அடிகளார் சமாதி வைக்கப்பெற்ற இடத்தில் ஓர் ஆலயம் அமைக்கவும் நன்முயற்சிகள் நடக்கின்றனவாம். ஸ்ரீமத் சுவாமி நடராசானந்தர் அவர்கள் இத்தொண்டை ஆரம்பித்திருப்பதாக அறிய வருகின்றது.

### தமிழில் தேர்ச்சி பெற்றவருக்கு உதவிப்பணம்

சிங்களத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உதவிப் பணம் கொடுப்பது போல் தமிழில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும், அரசாங்கம் உதவிப்பணம் கொடுக்குமாறு கேட்கவேண்டுமென்று அரசாங்க இராணுவப் பகுதி எழுத்தாளர் சங்கத்தார் தாய்ச் சங்கத்தைக் கேட்டிருக்கின்றனர்.

## உண்மைப் பக்தனுக்குண்டாகும் இடைஞ்சல்கள்

### இறைவனுடன் ஒன்றுபட்டு இன்புறுதற்கு அறிகுறி

நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்தெறிந்து துன்பங்கள் எல்லாவற்றையும் துடைக்கும் பொறுப்பை இறைவன்பால் விடுக. அப்பொழுது இறைவனுடைய அருளைப் பெறுவீர்கள்; அவர் உங்களை எல்லா வழிகளிலும் பாதுகாப்பார். இடைஞ்சல்களும் துன்பங்களும் வரும்பொழுது உங்களுக்கு வேண்டிய மனவலியையும் சமாதானத்தையும் அவர் தருவார்.

இடைவிடாது இறைவனைத் தியானஞ் செய்து [illegible] உள்ளம் தூய்மைப்பட்டு எந்த இன்னல்தரும் நிலைமையிலும் மனத்திடமும் சமாதானமுமுண்டாகி அமைதியாயிருக்கலாம். இறைவன்பாற் பூரணநம்பிக்கை வைத்து அவரிடம் உங்களைமுழுதாய் ஒப்புக் கொடுங்கள். காசு பொருளைப் பற்றித் தேகசுகத்தைப்பற்றி, எதிர்காலத்தைப்பற்றி யாதொன்றும் சிந்திக்க வேண்டாம். உங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையுந்தந்து அவர் உங்களைப் பாதுகாப்பார்.

இவ்வாறு உங்களை அவரிடம் முழுதாய் ஒப்புக் கொடுத்தபின் இடைஞ்சல்கள் ஏற்பட்டு விட்டால் அவைபற்றித் துன்புற்று முறுமுறுக்க வேண்டாம். உண்மையாய் ஒப்புக்கொடுப்பதற்கு அது மாறான செயலாகும். உங்களுக்கு என்னவேண்டும் என்பதை இறைவன் அறிவார். உங்களின் இறுதியான நன்மைக்கு எது சாதகமானதோ அதையே அவர் செய்வார் அவருடைய செயல்களின் கருத்துமறை பொருளாகி விளங்க முடியாததாகும்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### அதிசயமான தென்னை

கற்பிட்டியில் ஸ்ரீசேருலாவுதீன் மரைக்காயர் தோட்டத்தில் இரண்டடி உயரமுள்ள தென்னை ஒன்று நாலுமாசத்திற் காய்க்கத் தொடங்கியுள்ளது. ஏழு குலைகள், அவற்றுள்நான்கு குலைகள் ஒவ்வொன்றும் இருபத்தைந்து முப்பது தேங்காய்களை யுடையன. ஏனையவை நாற்பது ஐம்பது தேங்காய்களை யுடையன. முதலாவது குலைத் தேங்காய்கள் பழுத்துச் செத்தலாகிவிட்டன. தேங்காய்களோ பாக்களவு பருமனுடையவையாய் மாத்திர மிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹூ ஆடி மீ
௩௨ உ வெள்ளிக்கிழமை


## உள்ளொன்று வைத்து உரைத்தல்!

தென் துருவமும் — வட துருவமும் ஒன்றாகின வென்றாங்கு ஒப்பந்தம் நிறைவேறிவிட்டதெனப் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணியாரும் மித மிஞ்சிய குதூகலத்துடன் வெற்றிக் கொடி நாட்டினதும் அயல் நாட்டரசியற் றலைவர்கள் அச்செயலைப் பாராட்டியதும் சமஷ்டிக் கட்சியினர் மகாநாடுகூட்டி உடன்படிக்கையை வரவேற்று மாறாய் அபிப்பிராயங் கொண்டவர்களைச் சுயநல வாதிகள் என்று கண்டித்ததும் பொதுமக்களுக்கு விபரீத எண்ணங்களை உண்டாக்கியிருக்கும் வேளையில் உடன்பாட்டு முடிபுகளைப்பற்றி விரிவுரையும் விளக்கமும் முதல் அமைச்சர் வெளியிட்டு ஆரம்பத்தில் அமைந்துள்ள அசம்பாவிதங்களை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்.

சொல்லாட்சியாற் பொருள் மயங்க வைக்கப்பட்டிருக்கின்றது இந்தஉடன்பாட்டில் என்று நாம் முதற்கண் எடுத்துக் காட்டி விளக்கம் வேண்டி நின்றோம். இவ்வாறே அரசியல் அநுபவம் படைத்த அறிஞர்களும் கருதினர்கள். அதற்கிடையில் ஒப்பந்தத்தை உருவாக்கிய இரு திறத்தவர்களும் தங்கள் முயற்சியின் பயனை வியந்து பேசி மக்களை ஆதரிக்குமாறு வேண்டினார்கள். இப்பொழுது ஒவ்வாமையும் முரண்பாடுகளும் நிறைந்திருக்கின்ற ஒப்பந்தமாகக் காணப்படுகின்றதென்று தமிழகத்தார் முடிபாகக் கூறக்கூடிய நிலைமையை முதல் அமைச்சர் தனது விளக்கத்தால் உண்டாக்கியிருக்கின்றார்.

எந்த விதத்திலும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிவிடுதல் வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் எந்தத் தலைவர்களுக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் இந்நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவந்த சம உரிமைகளை எந்த ஆட்சியாளர்களும் எடுத்துவிட முடியாது என்பதே தமிழகத்தின் அடிப்படை முடிபு. இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய வகையிற் சட்டத்தால் உறுதிப் படுத்துவதற்கும் வழிவகுத்தலைப்பற்றியே தலைவர்கள் சமரசப் பேச்சுக்களை நடத்தலாம். அரசியற் றலைவர்கள் ஒருவரோடொருவர் அளவளாவி நல்லெண்ணத்தோடு சமரச நெறியில் முடிபுகளைக் காண்பது வேறு, சொல்லலங்காரத்தாலும் பொருள் மயங்கும் பொழிப்புரைகளாலும் நெருக்கடி நிலைமையை நீக்கிவிட நெறி இயற்றுவது வேறு. ஒற்றுமை மனப்பான்மையை உண்மை ஒழுக்கத்தால் உண்டு பண்ணலாமேயன்றி உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று புகன்று வருவதால் உண்டாக்கமுடியாது.

# உருக்குலைந்தது சமரச ஒப்பந்தம்

## மாறிமாறி வெளி வரும் மாறுபட்ட கருத்துக்கள்

முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவுக்கும் தமிழரசுக் கட்சியாருக்குமிடையிற் செய்யப்பட்ட ஒப்பந்தம் பற்றிய விளக்கங்களும் கருத்து வேறுபாடுகளும் நாட்டில் மிகவும் பெருகிப் பரவிவந்தன. சிங்கள மக்களுக்குத் துரோகமானதென்று சிங்கள அரசியற் கட்சிகளும் தமிழ்மக்களுக்குத் துரோகஞ் செய்துவிட்டதென்று தமிழ் அரசியற் கட்சிகளும் ஒப்பந்தத்தைப்பலவாறு கண்டித்தன.

### முதல் மந்திரியின் விளக்கம்

நிலைமையை விளக்கிச் சமாதானஞ் செய்வார் போன்று முன் வந்தார் முதல்மந்திரி. வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணங்களில் தமிழில் ஆட்சிநடக்க வேண்டுமென்று சமஷ்டிக் கட்சியினர் கேட்டுக்கொண்டனர். தனிச் சிங்களச் சட்டத்தைப் பாதிக்காத முறையில் ஏற்க முடியும் என்று கூறினேன் என்று மொழி ஆட்சிபற்றி விளக்கினர். பிரதேச சபைகள் சமஷ்டி அரசுகள் ஆகா. ஒப்பந்தத்தின்படி பிரதேச சபைகள் நியாயமான அளவு குடியேற்ற வாசிகளைத் தெரிவு செய்யலாம். பெருங்குடியேற்றத் திட்டங்களில் அரசாங்கம் பெருந்தொகைப் பணம் செலவிடும்பொழுது மத்திய அரசாங்கமும் குடி நெருக்கமான இடங்களிலிருந்து குடியேற்ற வாசிகளைக் கொண்டு வந்து குடியேற்றலாம் என்று குடியேற்றம் பற்றி விளக்கினர்.

### திரு செல்வநாயகத்தின் கூற்று

முதல்மந்திரியின் விளக்கம் பற்றித் தமிழரசுக்கட்சியார் ஆலோசித்த பின் முதல் மந்திரியின் விளக்கத்தை எதிர்த்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றார் திரு. செல்வநாயகம்.

முதல்மந்திரி வெளியிட்ட விளக்கத்தின் சில பகுதிகள் ஏற்க முடியாதவையாயிருப்பதைக் கண்டு வருந்துகின்றேன். என்னுடன் ஆலோசித்தபின்பேபூரண அறிக்கை வெளியிடுவதாகப் பிரதிநிதிகள் சபையில் முதல் மந்திரி சொன்னர். அந்த ஆலோசனை இன்னும் நடக்கவில்லை. அப்படியிருக்கவும் நீண்ட அறிக்கை ஒன்றை முதல்மந்திரி வெளியிட்டிருப்பது கண்டு அதிசயப்பட்டேன்.

வேறுபாடுள்ள அம்சங்களுள் இரண்டு விசேடமாகக் குறிக்கப்படவேண்டியவையாயிருக்கின்றன.

முதலாவது மொழிபற்றியதாகும். பிரதிநிதிகள் சபையில் 25-4-57-ல் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையில் காகிதப் போக்குவரத்து ஆட்சி ஆகியவை தமிழில் நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. தனிச் சிங்களச் சட்டம் உண்டாக்கிய நெருக்கடி தளர்த்தப்படும் என்பது தெளிவாயிருந்தது. ஆனல் இப்பொழுது வெளியிட்டுள்ள அறிக்கையில் 1960 ஆண்டளவுக்கு மாத்திரம் தமிழ் மொழி ஆட்சி நடக்கலாமென்று காலவரை செய்துவிட்டார். அவர் தமது கூற்றை மாற்றிவிட்டார் என்பதைக் கண்டு வருந்துகின்றேன். ஒப்பந்தத்தின் ஐந்தாம் அம்சத்தில் விவசாயம், ஐக்கியர், காணி, குடியேற்றம், கல்வி, சுகாதாரம் முதலியவற்றின் தொடர்பில் வேண்டப்படும் அதிகாரத்தைப் பாராளுமன்றப் பிரதேசசபைகளுக்குக் கொடுத்துவிடுமென்று குறிப்பிடப்பட்டது.

இவை எல்லாவற்றுள்ளும் குடியேற்றம்பற்றி விசேடமாக விளக்கப்பட்டது. குடியேற்ற வாசிகளைத் தெரிவுசெய்தல் குடியேற்றத்திட்ட உத்தியோகத்தரைத் தெரிவுசெய்தல் என்பவற்றின் அதிகாரம் பிரதேச சபைகளுக்குண்டு என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. கல்லோயாக் குடியேற்றம் மாத்திரம் விசேடமாக வேறுபடுத்தி ஆராயப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இத்தொடர்பில் ஆண்டமொழி மற்றெல்லாக் குடியேற்றத் திட்டங்களையுந் தழுவி கல்லோயா ஒன்றை மாத்திரம் வேறுபடுத்தியுள்ளது சிறுக் குடியேற்றத் திட்டங்கள்பற்றிய அதிகாரம் மாத்திரம் பிரதேச சபைகளுக்குக் கொடுக்கப்படுமென்று எப்பொழுதாயினும் கருதப்பட்டதில்லை. ஏனைய திட்டங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியமையாலேயே கல்லோயாத் திட்டம் வேறுபடுத்திக்கூறப்பட்டது.

கருத்துக்கள் ஒன்றுக்கொன்றெதிரானதாய் மாறிமாறி மேன்மேலும் வளர்ந்துகொண்டிருக்கின்றன.

# திருக்கேதீச்சரத்தில் விநாயகப் பிரதிஷ்டை

## திருப்பணிச் சபைத் தலைவரின் விளக்கம்

—0—0—

ஐந்துகரத்தெம் ஆதி முதல்வராகிய செல்வவிநாயகப் பெருமானின் திருவருளால் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை சென்ற 11-7-57ல் எங்கள் செல்வ விநாயகப் பெருமானை முதலாம் பிரகாரத்தில் தென்மேற்கிலுள்ள புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் இதைப்பற்றி எழுத முன்னரே தீர்மானித்திருந்தது. அச்சுப நேரத்திலேயே நம் ஞானபண்டித வெற்றி வேலாயுத, இதைய குகைவாச சுப்பிரமணியப்பெருமானையும் தமக்குரிய வடமேற்கு ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்யப்பெருமான் திருவருள் புரிவாராக.

திருக்கேதீச்சரா ஆலய அமைப்பு மாதிரிப் படத்தின்படி மேற்குப் பக்கத்திலுள்ள ஆறு பரிவாரக் கோவில்களும் அவை[illegible]க்கு மத்தியில் உள்ள [illegible] தன மகாலிங்கப் பெருமானுக்கெனக் குறிக்கப்பட்ட மண்டபத்திற்கும் ஒரே நேரத்தில் மூடுசாந்து போட்டு முடிப்பதுதான் உத்தமமென்பது ஸ்தபதியார்களின் கருத்து.

சேர். கந்தையா வைத்தியநாதன்
திருப்பணிச் சபைத் தலைவர்

ஆகவே இந்த ஏழுகோவில்களுக்கும் பொறுப்பேற்றுக்கொண்ட சிவபக்தர்களின் பொருளுதவி முழுவதும் சேரும்வரை பார்த்திராமல் பொதுவாகச் சேர்த்துவரும் நிதியைக் கொண்டே முன்கூறிய மூடுசாந்து போட்டு முடிப்பது திருப்பணிச் சபையின் திட்டம். அப்படி மூடுசாந்து போட்டதும் விநாயக சுப்பிரமணிய ஆலயங்களுக்கு மாத்திரம் தனித் தனியே விமானங்களைக் கட்டி எழுப்ப முடியும். அததுடன் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள்கூறிய—இப்போது ஒரு பக்கத்தில் பழுதுற்றிருக்கும் பழைய, இலிங்கத்தையும் பழுதுபார்த்துத் தனக்குரிய மண்டபத்தில் எழுந்தருளி இருந்து பரிவார மூர்த்திகளுககு நடுநாயகமாக விளங்கச் செய்வது திட்டம். இவ்வேலைகள் இனிது நிறைவேறத் திருவருள் முன்னின்று வழிகாட்டப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வேலைகள் இம்மாதத்திலேயே தொடங்கும்நோக்கமாக ஆலய அமைப்புப் படம் வரைந்த திருவாளர் செல்லக்கண்ணு ஸ்தபதியாரும் அவரின் உதவி ஆட்களும் வருவதற்கு "விசா" உத்தரவுப் பத்திரங்கள் எடுத்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. குறிக்கப்பட்ட வேலைகள் திருவருள் சம்மதமாயின் மார்கழி மாதத்தில் பூர்த்தியாவதற்கு வேறு தடைகள் இருக்கமாட்டா. தை மாதம் உத்தராயண புண்ணிய

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### விளக்கம் வேண்டுகின்றனர் முஸ்லிம்கள்

முதல் மந்திரி சமஷ்டிக் கட்சியுடன் செய்த ஒப்பந்தத்தின்படி முஸ்லிம்களின் நிலைமை என்னவென்று முதல் மந்திரியைக் கேட்க வேண்டுமென்று அகில இலங்கை "முஸ்லிம்லீக்" தீர்மானித்திருக்கின்றது. குறித்தஒப்பந்தத்தை இவர்களுட் சிலர் நிராகரிப்பதாக இத்தொடர்பிற் குறிப்படப்பட்டுள்ளது.

### கரம்பன் மங்கலவார மடம்

#### விசேட சிவபூசையும் மகேசுர பூசையும்

நிகழும் 13-8-57 செவ்வாய்க்கிழமை காலை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகே 1848ம் ஆண்டு சைவ யாத்திரிகர்களின் வசதிக்காக வண்ணார்பண்ணை ஸ்ரீசிதம்பர சுப்பையச் செட்டியார் அவர்களால்நிறுவப்பெற்ற மங்கலவார மடத்தில் சிறந்த சைவாசாரியர்களால் சிவ பூசையும் மகேசுர பூசையும் தேவாரபாராணமும் பின் அன்னதானமும் நடைபெற்றன. வேதாரணியத்தைச் சேர்ந்த உயர்திரு. செ சோமாஸ்கந்தக் குருக்களும் உயர் திரு மறைக்காடக் குருக்களும் சிறந்த முறையிற் சிவ பூசை செய்தனர். உயர் திருமறைக்காடக் குருக்களும் வேலணை வித்துவான் திரு. மகாலிங்கமும் பக்திப் பரவசத்துடன் தேவார பாராயணஞ் செய்தனர். பின்பு அன்னதானம்நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு ஆவன செய்து ஊக்கமளித்த சைவபரிபாலன சபைச் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு மயில்வாகனம் அவர்களுக்கும் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றியவர்களுக்கும் மேற்படி மடப்பரிபாலகர் திரு. சி. முத்துக்குமாரன் நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆங்கில சுவாமியின் அருட் காவடி

பழைய தேசாதிபதி சோல்பரி பிரபுவின் புதல்வர் ஸ்ரீ இரம்ஸ் போதம் சுவாமியார் கதிர்காமத்திற் காவடி எடுத்துக் கந்தவேளை வழிபட்டாராம். அருள் வயப்பட்டு ஆனந்தக் கூத்தாடி அவர் இன்புற்றமை ஏனையபக்தர்களையும் இன்பசாகரத்தில் அமிழ்ந்தச் செய்ததுஎன்பது பலவாறு பாராட்டப்படுகின்றது.

## கதிர்காமத் தீக் குளிப்பிற் காயம்

—0—

கதிர்காமத்தில் வழக்கமாக இரவில் நடக்கும் தீக்குளிப்பு இந்த ஆண்டு பகலில் நடைபெற்றது.

பெருந் தொகையானேர் தீக்குளிக்க முற்பட்டனர். நாற்பத்தைந்து பேர் வரையில் விரதத்தை ஊறின்றி நிறைவேற்றினர். ஆனல் இருபது பேர் வரையில் எரிகாயப்பட்டு அரசாங்க வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட வேண்டியவர்களாயினர்.

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## திருவிளையாடற் புராணம்

(முற்றொடர்—2)

### வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்

இன்று எந்தப் பாடம்? (வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்) வாசித்துவந்திருப்பீர்கள்தானே (ஆம்) ஆகவே இப்படலத்தின் கதையைச் சுருக்கிக் கூறுகின்றேன், கேட்டுக் கொள்ளுங்கள்.

வரகுணன், சுந்தரேசபாதசேகர பாண்டியனுடைய மகன். ஒரு முறை வேட்டைக்குச் சென்றுன். வேட்டையாடி மீளும்பொழுது அவனுடைய குதிரை பிராமணனெருவனை மிதித்துவிட்டது. பிராமணன் இறந்துவிட்டான். அதனல் அவனைப் பிரமகத்தி (பிராமணனைக் கொன்ற தோஷம்) பிடித்து விட்டது. அத் தோஷம் நீங்கும் பொருட்டாக அவன் பலவகைத் தானங்களையும் வேள்விகளையும் புரிந்தான். இறுதியில் சோமசுந்தரக்கடவுளை ஆயிரத்தெட்டு முறை வலம் வந்தால் பிரமகத்தி நீங்குமென அந்தணர்கள் சொன்னுர்கள். அப்படியே அவன் செய்தான் அப்பொழுது அசரீரியாக இறைவன் "சோழ மன்னன் உன்னேடு போர் புரிய வருவான், அவனைத் துரத்திப் போகும்போது திருவிடை மருதூர் என்னுந் தலத்தை நீ அடைவாய். அங்கு உனது பிரமகத்தியை நாம் நீக்குவோம்" என அருளினுர்.

அதன்படியே சோழனேடு போர் புரிந்து, திருவிடை மருதூரிலே பிரமகத்தி நீங்கப் பெற்றவன் திருவிடை மருதூரின் மேலைக் கோபுரத் திருப்பணிகளை நடாத்தினவன். சிவபெருமானருளினுலே சிவலோகத்தைப்பூலோகத்திலே கண்டு களித்தவன். அதனலே மதுரை மாநகரம் "பூலோக கைலாயம்' என விளங்குகின்றது.

இவ்வளவும் இப் பாடத்தின் சுருக்கமாகும். இனி இப்பாடத்திலே வரும் அரும்பதங்களின் பொருள்களைச் சொல்வேன். அவதானித்துக் கொள்ளுங்கள்

அரும்பதங்களின் பொருள்:

கடைத்தலை - முதல்வாயில்; மயான கிருத்தியம்—சுடலைச்சடங்கு; பிரமகத்தி - பிராமணனைக் கொன்ற தோஷம்; அகமருடணம் - பாவத்தைப் போக்கும் மந்திரம்; கோதானம் - பசுவைத் தானமாகக் கொடுத்தல்; பூதானம் -பூமிதானம்; அலகிடுதல் - சுத்தஞ் செய்தல்; நிருவாண தீக்ஷிதர் - சிவ தீக்ஷையில் மேலான தீக்கை பெற்றவர்கள். மாகேசுர பூசை அன்னதானம்; ஏத்தெடுத்தல் - வணங்குதல்.

இப்பாடத்திலே சிலவிஷயங்களை விளக்கி இப்பொழுது கூறுவேன்: கவனித்து வேண்டியவற்றைக் குறித்துக்கொள்ளுங்கள்.

திருநந்திதேவர்:- பலிபீடத்துக்கும் சிவலிங்கத்துக்கும் இடையிலே இருப்பது நந்தியாகும். நந்தி சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவைக் குறிப்பது. சிவ அம்சம் பெற்றது. இவர் கோடி வருடந் தவஞ் செய்து சிவபெருமானுக்கு வாகனமும் துவார பாலகருமானவர். சிவனது முதன் மாணக்கரும் சந்தான குரவர்க்கு முதற் குருவுமாவர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## சேனநாயகவின் சமரசப் பேச்சு

சென்ற சனிக்கிழமை ஐக்கியதேசியக் கட்சிக் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது. பண்டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம்பற்றி ஸ்ரீ டட்லி சேனநாயக தமதுகருத்தை வெளியிட்டார். இலங்கை தனித் தனியாகப் பிரிக்கப்படுவதை எதிர்ப்பதாகவும் திட்டத்தின்படி பிராந்திய சபைகளுக்குக் கொடுக்கப்படும் அதிகாரத்தைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை என்றும் இலங்கையிலுள்ள ஒவ்வொரு பிரசைக்கும் எல்லா இடங்களிலும் சம உரிமை இருக்கவேண்டுமென்றும் அவர் பேசும் போது குறிப்பிட்டார். மொழிபற்றிய இவரது கொள்கை பலபாகங்களிற் கண்டிக்கப்படுகின்றது.

# விசுவநாதப் புலவர்

—————○—————

## நினைவுக்கு நூலும் நூல்நிலையமும்

இப்புலவர் பெருந்தகையார் இற்றைக்கு 175 வருடங்கட்கு முன்பு வேளாளர் குலத்திற் பிறந்தனரென்ப. இவர் இயற்கையாகவே கவி பாடும் ஆற்றல் படைத்தவர். அதுவுமன்றி வைத்தியமும் தெரிந்தவர். இதனல் இவரைப் பலரும் தத்தம் கிராமத்திற்குஅழைத்துச் செல்வர். இவர் இல்லறம் புகுந்து இரு புதல்வியரைப் பெற்றபின் துறவறம் பூண்டவராகவும் தெரிய வருகின்றது. இவர் கடவுள் பக்தியிற்சிறந்தவர். இவருடைய காலம் ஒல்லாந்தர் அரசாட்சிக்காலமாகும். அக்காலத்திற் கூட அவர் சமயநெறி மாருது அஞ்சா நெஞ்சுடன் பல கிராம மக்களுக்குச் சைவநெறிகளைப் போதித்து இறைவன்மீது தோத்திரக் கவி பாடுதலைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தார்.

கட்டுவன் ஐயனுர்சுவாமி மீதும் வர்த்தலைவிளான் விநாயகர் மீதும் தென்மயிலை ஞான வைரவக் கடவுள்மீதும் தோத்திரக் கவிகள் பாடியுள்ளார். இன்னும் வசாவிளான் மானம்பராய்த் தல மீதும் தென்மயிலை வீரபத்திர சுவாமி மீதும் தோத்திரம் பாடியுள்ளார். வீரபத்திரக் கடவுள் மீது ஒரு வசந்தநாடகம் பாடியுள்ளார்கள். இவ் வசந்த நாடகம் நம் முன்னேர்களால் நடிக்கப்பட்டது. பாட்டுகள் மூலம் புலவர் அவர்கள் வீரபத்திரக் கடவுளையே தமது உபாசனுமூர்த்தியாகவும் கொண்டாரென்பது தெரிய வருகின்றது. இவ் வசந்த நாடகப் பாக்கள் சொற்சுவை பொருட்சுவை பக்திச் சுவை பொருந்தியுள்ளன. இன்றும் இளைஞர்கள் நவராத்திரி காலத்தில் வீரபத்திர சுவாமி கோயிலில் இவ் வசந்த நாடகக் கவியைப் பாடிக் கோலாட்டம் விளையாடுகிருர்கள். இப்போது இப்புலவர் பாடிய தோத்திரக் கவிகளும் வசந்த நாடகமும் தென்மயிலை பண்டிதர் திரு. வ. முத்துக்கு

………………………………

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

………………………………

மாரு அவர்களிடம் இருப்பதாக அறியப்படுகிறது. அவர்கள் இப்பாடல்களைத் திரட்டி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையுடன் வெளியிடுவார்களெனவும் அறிகின்றேம்.

இதற்குக் கிராமச் சைவ மக்கள் எல்லோரும் உதவி புரிந்து இப் புலவர்பெருமான் நினைவாக அவர் அருளிய பாடல்களை நூல் வடிவாக யாத்து வெளியிட்டு அவர் பேரில் ஒரு நூல் நிலையம் நிறுவி நாடகக் கலையை வளர்ப்பார்களாக.

### சிவசயிலத்திற் சிவலிங்கப் பிரதிட்டை

தென்காசிப் பகுதியில் சிவசயிலத்தில் தருமபுர ஆதீனத்தாற் புதிதாகக் கட்டுவிக்கப்பெற்ற திருக்கோயிலில் ஆடி மீ 3 உ புதன்கிழமை (14-8-57 சிவலிங்கப்பிரதிட்டை செய்யப்பெற்று மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.

# விவேகானந்த சபையாரின் கதிர்காம யாத்திரை

———:○:———

## அருட்பொலிவுடன் அன்பர்களுக்கு முன்மாதிரியாயும் அமைந்த சிறப்பு

கொழும்பு விவேகானந்த சபையின் இளைஞர்இயக்கம் ஒழுங்கு செய்த யாத்திரீகர் குழு 3-8-57 சனிக்கிழமை காலை 7 மணிக்கு விவேகானந்த சபையிலிருந்து கதிர்காமத்துக்குப் புறப்பட்டது. சபை அங்கத்தவர்களும் வித்தியாலய ஆசிரியர்களுமாக ஐம்பதின்மர் யாத்திரையிற் பங்குபற்றினர்.

சபைத்தலைவர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், சபையின் இளைஞர் இயக்கத் தலைவர் திரு. ஆர். சபாநாயகம் ஆகியோர் யாத்திரீகர் குழுவை வழியனுப்பி வைத்தனர். திரு. வி. பி. என். சிங்கம், விவேகானந்த சபைக் காரியதரிசி திரு. எஸ் இராசதுரை இளைஞர் இயக்கக் காரியதரிசி, திரு. எஸ். சிவசுப்பிரமணியம், விததியாலயத் தலைமையாசிரியர் திரு. திரு. கு. வி செல்வத்துரை ஆகியோர் யாத்திரீகர்களை வழி நடத்தும் பொறுப்பு ஏற்றுக் கொண்டனர். கதிர்காமத்தில் யாத்திரீகர்களுக்கு வேண்டிய உணவுகளை ஆயத்தம் செய்து கொடுத்தார் விவேகானந்த வித்தியாலய முகாமைக்காரர் திரு வி. அலலிராசா.

குறித்த குழு கழுத்துறை கதிர்காம மடத்தில் ஆறி சுவாமிதரிசனம் செய்த பின் மாத்தறைக் கதிர்காம மடத்தை அடைந்தது. அங்கு பகற் போசனத்தை முடித்துக்கொண்டு மாலை கதிர்காமத்தை அடைந்து யாவரும் திருவிழாவைக் கண்டு களிப்படைந்தனர்.

மறுநாள் செல்லக்கதிர்காமம் சென்று நீராடி பொங்கலிட்டு மாணிக்கப் பிள்ளையாரை வழிபட்டனர். அன்றே கதிர்காமக் கந்தனைப் பக்தி பரவசத்துடன் வழிபட்டுக் கர்ப்பூரச் சட்டியுடன் பிரதட்சணம் வந்தனர். திங்கட்கிழமை காலையில் எல்லோரும் கதிரமலைக்குச் சென்றனர். வயதானவர் இளைஞர் என்ற வித்தியாசமின்றி அரோகராக் கோஷஞ் செய்து எல்லோரும் ஆர்வத்துடன் மலை ஏறிய காட்சி மிகவும் ஆனந்தமாயிருந்தது. திருநாவுக்கரசு நாயனுர் திருக்கயிலை யாத்திரை செய்த ஞாபகந்தான் அப்பொழுது வந்தது. மலை உச்சியை அடைந்ததும் மணிகள் கணீர், கணீர் என் ஒலிக்க குறிஞ்சிக் கடவுளாம் கந்தனை ஆனந்த அருவி சொரிய வழிபட்டனர் அனைவரும். உச்சி மலையில் வேற்சுவாமி தலைமையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. குன்றின்மேலிருந்து நோக்கியபோது இறைவனின் அற்புதத்தை எண்ணி எண்ணி வியப்படையாதவர் யாருமில்லை. கதிரைமலைக் கந்தனுக்கு இன்சுவை அவல் அமுது படைத்து வழிபட்டுக் கொண்டு பேரின்பம் பெற்றுப் பெருவாழ்வெய்திய ஞானிகள் போன்று அனைவரும் மலையிலிருந்து இறங்கினர்.

விவேகானந்த சபையினரின் யாத்திரை ஏற்பாட்டைப் பலரும் அறிந்து மகிழ்ந்தனர். மலையிலே விவேகானந்த சபைக்கு அரோகரா என்று எழுந்த குரல் எங்கும் பரந்து ஒலித்தது. 5-8-57 திங்கள் நண்பகல் புறப்பட்ட யாத்திரைக் குழுவினர் அன்று இரவு ஒன்பது மணிக்குச் சபைக்கு வந்து சேர்ந்தனர். சபையின் தலைவரும் இளைஞர் இயக்கத் தலைவரும் ஆர்வத்துடன் யாத்திரீகரை வரவேற்றபின் சபை மண்டபத்தில் நடைபெற்ற பிரார்த்தனையுடன் யாத்திரை முயற்சி நிறைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகவாசத்தால் வரும் நன்மை தீமைகள்

## சிறுவர்களை நல்வழிப்படுத்தப் பெற்றோர் செய்யவேண்டியவை

சகவாசம் என்றால் உடன் வசித்தல்; அதாவது உடனிருந்து நெருங்கிப் பழகுதல், புல் பூண்டு முதல் புள், மிருகம், மனுஷனீறாக எல்லாரும் சகவாச தோஷத்தால் பாதிக்கப்படுகிறார்கள். நிலவாசி, நீர்வாசி, காற்று வாசியினால் செடி கொடிகள் பாதிக்கப்படுகின்றன என்பது பிரத்தியக்ஷம். இந்த உபாயத்தால் செடிகளின் தோற்றத்தைக்கூட மாற்றி விடுகிறார்கள். பிராணிகளும் அப்படியே சகவாசதோஷத்துக்குட்பட்டனவாக விருக்கின்றன. மனுஷனது குணம் அவன் சகவாசத்தைப் பொறுத்ததென்பது பிரசித்தம். "உன் தோழனைக் காட்டு உன் குணத்தைச் சொல்கிறேன்" என்று சொல்லும் மூதுரையில் பொதிந்து கிடக்கும் உண்மை இதுவே. குழந்தைகளை வளர்ப்பதில்கெட்டசகவாசம் கூடாமற் பாதுகாப்பது பெற்றோர் கவனிக்க வேண்டிய முதற் கடமையாக விருக்கின்றது. நம்மவர்களில் புத்தியில்லாத் தாய் மார்களும் அத்தை, பாட்டி, கிழம், கட்டைகளும் குழந்தைகள் ஒன்றும் தெரியாதவர்களென்று அவர்களை அடிக்கடி பொய்புளுகுகள் சொல்லி ஏமாற்றுகிறார்கள். குழந்தைகளைப்போல் குணத்தைக் கிரகிக்கும் சக்தி பெரியோர்களுக்குக் கிடையாது. அவர்களுடைய மனம் வெளித்தோற்றத்துக்கு விஷயங்களைக் கிரகிக்கும் சக்தியற்றவையாக விருப்பினும், விஷய வாசனைகளை முற்றும் கிரகிக்கும்படியான சக்திவிசேஷமாகவுண்டு என்னும் உண்மையை இவர்கள் அறியவேண்டும் எப்படி பாலானது காற்றிலுள்ள அசுத்த வாசனைகளைக் கிரகிக்கிறதோ அப்படி குழந்தைகளின் இளமனம் விஷயவாசனைகளைக் கிரகிக்கின்றது. சிறு குழந்தைகளிடத்தில் துர்க் குணங்கள் விசேஷமாகப் படிந்திருந்தால் அக் குழந்தையைச் சுற்றியிருந்தவர்கள் துர்க்குணம் நிறைந்தவர்களென்பது சந்தேகமறத் தீர்மானிக்கலாம். விஷயங்களைவிட விஷய வாசனை பலமானது. கிளைகளைவிட வித்து எப்படி அதிக சக்தியையுள்ளடக்கிக்கொண்டிருக்கிறதோ அப்படி விஷயங்களைவிட விஷயவாசனை விசேஷ சக்தியுள்ளதாக விருக்கின்றது. சுவரிடுக்குகளில் வித்து விழுந்தது தெரியாமல், செடிகள் முளைக்கும் பொழுது அங்கு அச்செடியின் வித்து எப்படியோ சேர்ந்திருக்க வேண்டும் என்று எங்ஙனம் தீர்மானிக்கிறோமோ அப்படியே குழந்தைகளிடத்தில் துர்க்குணங்கள் வெளியாகும் பொழுது கெட்ட வாசனை அவர்கள் மனதில் இதற்குமுன் சகவாச தோஷத்தால் படிந்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கத் தக்கதாயிருக்கிறது. சுவரிடுக்குகளில் முளைக்கும் செடிகள் எப்படி சல்லி வேரோடி சுவரின் கற்களையெல்லாம் வெவ்வேறாகப் பிரித்து விடுகின்றதோ அப்படியே கெட்ட சகவாசத்தினாலுண்டாகும் வாசனாதோஷம் குழந்தைகள் மனத்தில் வேரூன்றிப் படர்ந்து அவர்கள் குணத்தையெல்லாம் கெடுத்து விடுகின்றது. ஆகையால் குழந்தைகளிடத்தில் துர்க்குணம் வெளியாகும்பொழுது அவர்களுடைய சகவாசம் கெட்டதாயிருக்க வேண்டுமென்று ஆராய்ந்து கெட்ட சகவாசத்தை வாசனையற நீக்க வேண்டும். சகவாசத்தை நீக்காமல் குழந்தைகளைக் கண்டித்துச் சீர்திருத்திவிடலாமென்று எண்ணுவது, வேரிருக்கச் செடியின் கிளைகளையொடித்துவிட்டால் அது அற்றுப்போமென்று நினைப்பதுபோலாகும். செடியை எப்படி வேரோடு களைய வேண்டுமோ, அப்படியே துர்க் குணங்களை வாசனையோடு அறநீக்க வேண்டும். விஷய வாசனை இரண்டுவிதம் சகவாச தோஷத்தாலுண்டாவது ஒன்று; பூர்வ ஜன்மகர்மத்தால் உண்டாவது ஒன்று. சகவாச தோஷத்தாலுண்டாகும் வாசனையானது கெட்ட சகவாசமின்னதென்று ஆராய்ந்து நீக்கப்போகும். பூர்வஜன்மத்தாலுண்டான வாசனை அப்படி நீக்கத்தக்கதல்ல. அது அந்த வாசனைக் கெதிரான நல்ல வாசனைகளைப் பழகுவதால் ஆற்றல் குன்றி ஒடுங்கும்: "வாசனைப் பழக்கத்தினன் மனம், அந்த மனத்தான் ஓத வந்திடும் உரை; உரைப்படி தொழில் உளவாம்" என்னும் தாயுமானவர் திருமொழி நோக்கத்தக்கது.

— வி. சி.

# மாணாக்கர் மதிவள மன்றம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்குப்பாலகர்: இந்திரன் அக்கினி, இயமன், நிருதி, வருணன் வாயு. குபேரன், ஈசானன் எனப்படுவர்.

இந்திரனுடைய பழி: பிரகஸ்பதி தேவேந்திரனுடைய குரு. தேவேந்திரன் பிரகஸ்பதியை ஒரு சமயத்தில் மதிக்கவில்லை. அதனால் அவனது செல்வமுஞ் சிறப்பும் குலைந்தன. இங்ஙனமாக இந்திரன் விருத்திராசுரன் என்பவனைக் கொன்றான். அதனால் பிரமகத்தி தோஷம் அவனைப் பீடித்தது. அவன் பிரகஸ்பதியை வேண்டினான். பிரகஸ்பதி இந்திரனை அழைத்துப் "பழிதீர்க்கும்பொருட்டுப் பூமியினிடத்தில் வா" என்றார்.

அங்ஙனமே பூமிக்கு வந்த இந்திரன் பொற்றாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரப் பெருமானை வணங்கித் தனது தோஷம் நீங்கப் பெற்றான். (இந்திரன் பழிதீர்த்த படலம் பார்க்க.)

வரகுணபாண்டியன், சிவபெருமான் தனக்கு அருள் புரிந்த தன்மையை யிட்டுச் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய மூன்று பாடல்கள் இப்பாடத்தில் உள்ளன. அச் செய்யுள்களின் பொருளைக் கூறுகின்றேன். கேளுங்கள். முதலாவது செய்யுளின் பொருள்: நாய் போன்ற என்னை வருத்தும் பிரமகத்தியை நீக்கித் தாயைப்போன்று அன்பு செய்து ஆண்டவனே! உன் திருவடிக்குவணக்கம். உனக்குத் தாரமாயுள்ள யான் கண்டு தரிசிக்கும்படியாகச் சிவலோகத்தைக் காட்டிப் பின்னர் திருக்கோயிலில் என்னெதிரில் நின்றருளிய கிருபாமலையே! உன் திரு திருவடிக்கு வணக்கம்.

இரண்டாவது செய்யுள்: மயங்கிச் செய்யும் வினை வழிச் சென்று கொடிய நரகில் அழுந்தாமல் அடியேனுக்கு அன்பு தந்து ஆண்டவனே! உன் திருவடிக்கு வணக்கம். எழு வகைத் தோற்றமாகி நான்கு வகையுடையுளடங்கிப் பரந்த பல பிறப்புக்களும் பாழ்பட்டுப் போகும்படியாக என்னைக் குற்றேவல்கொண்டவனே! உன் திருவடிக்குவணக்கம்.

மூன்றாவது செய்யுள்:-

வினைப்பற்றுடைய என்னைக் கொடிய பழியினின்று வேறுபடுத்தி எமது சந்திர குலத்துக்கு நேர்ந்த குற்றத்தை தீர்த்தவனே உன் திருவடிக்கு வணக்கம். சிவநேயமுடையார்க்கு அவ்விடத்துச் சிவபுரமுண்டென்று சிவாகமாதிகள் கூறுவதை இப்பொழுது எங்களுக்குக் காட்டித் தெளிவித்தவனே! உன் திருவடிக்கு வணக்கம்.

அடுத்த பாடம் விறகு விற்ற படலம். நன்றாக வாசித்துக்கொண்டு வாருங்கள். (வளரும்.)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையாரால், சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, ஆடி மாதம் 18 உ (2-8-57) வெள்ளிக்கிழமை பிற்பகல், காசிவிநாயகர் ஆலயமண்டபத்தில் சபைத் தலைவர்தலைமையில்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாலை நாலரை மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உருவப்படத்திற்கும் விசேட ஆராதனைகள் நடைபெற்றன. பின்பு தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாகித் தலைவர் முன்னுரை கூறியதும் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர் திரு. நா. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது சமய குரவர்களின் தினத்தைக் கொண்டாடும் சிறுவர்கள் சமய ஆசாரங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும், கோயிலுக்குப் போகும்போது ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து விபூதி அணிந்து போதல் வேண்டுமென்றும், சிறுவயதில் சமயப் பழக்கங்களைப் பழகிக் கொண்டால் அது பிற்கால வாழ்க்கைக்குத் துணைசெய்யுமென்றும் சுந்தரமூர்த்தி நாயனார் அதிதீவிர பக்குவமுள்ளவராகையால் அவருக்குச் சுவாமியே ஆகவேண்டிய துணைகளைச் செய்தாரென்றும் குறிப்பிட்டார்.

அதன்மேல் திரு. எம். எஸ். சிதம்பரப்பிள்ளையும் பேசினார். தலைவர் முடிவுரை கூறும்போது குருபூசை உபயகாரர் திரு. ஆ. கனகசிங்கம் அவர்களைப் பாராட்டினார்.

---

# ஈதல் ஏற்றல்களில் இன்பமும் துன்பமும்

ஸ்ரீ வ. குகசர்மா

"ஐயமிட்டுண்" என்று கூறிய ஔவையார் "ஏற்பதிகழ்ச்சி" என்றும் கூறினார். "ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" என்றுகூறியுள்ளார்தொல்காப்பியர். இவை பொது விதிகள். எதற்கும் சிறப்பு விதியும் உண்டு. ஏற்றல் எனவும் கோடல் எனவும் இலக்கணநூலில் வழங்கப்படும் இது பல சிறப்பு விதிகளை யுடைத்தாயிருக்கின்றது. கேளாதேற்றல் கேட்டேயேற்றல், விருப்பாயேற்றல், வெறுப்பாயேற்றல், இழிந்தோனேற்றல், உயர்ந்தோனேற்றல்எனப் பலவகையாக இலக்கண உரைகாரர் வகுத்துள்ளனர்.

இரத்தல் துன்பமுடையது என்பது யாவருக்கும் தெரியும். ஈதலும் ஒரு சமயத்தில் துன்பத்தைத் தருவது என வள்ளுவர் கூறுகிறார். "இன்னாது இரக்கப்படுதல் இரந்தவர் — இன்முகங் காணுமளவு" என்பது வள்ளுவர் வாக்கு.

தமிழை வளர்த்து வந்த புலவர்களும் தங்கள் உணவுக்காக இரந்தார்கள். அவர்கள் சாதாரண மக்களிடம் போவதில்லை. பெரிய அரசர்களிடமும் மூவேந்தரிடமும் சென்று இரந்து வந்தார்கள். புலவர்களைத் தாழ்ந்தவர்களாக மன்னர் மதிக்கவில்லை. அப்படியாக மதிக்கும் மன்னர்களைப் புலவர்களும் மதிக்கவில்லை அன்புடன் கொடுக்காத பரிசிலைப் புலவர்கள் ஏற்க மாட்டார்கள். அன்பில்லாப் பரிசிலைப் பெறாத ஒரு புலவர் கூற்று பின் வருமாறு:

"எழுவினி நெஞ்சஞ்
செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கையில்
வழி
அருகிற் கண்டும் அறியார்
போல
அகனக வாரா முகனழி
பரிசில்

தாளிலாளர் வேளாரல்லர்"

உண்ணுகின்ற நீரையுடைய இடம் சேறுபட்டாலும் அவ்விடத்தை விரும்பிப் பலர் செல்வர். கடல்நீரை விரும்பிக் கடலுக்குச் செல்லமாட்டார்கள். வருவோரின் முகக் குறிப்பை அறிந்து கொடுத்தல் சிறந்தது அவ்வாறு கொடுக்கும்போது மறுக்கக் காரணமிருந்தால் ஏற்போர் அதைக் கொள்ளேன் என மறுத்து விடுதல் சிறந்ததாகும். அந்நேரத்தில் ஏற்க மறுத்தவர் உயர்ந்தவ ராகின்றார். கொடு எனக் கேட்டல் இழிந்த செய்கை. கொடேனெனல் அதனிலும் இழிந்த செய்கை. முகக் குறிப்பைக் கண்டு கொடுத்தல் உயர்த செய்கை. ஏற்க முடியாதென்றல் அதனிலும் உயர்ந்த செய்கை. இது கழை(தி)ன் யானையார் என்னும் புலவர் கருத்து.

### உருத்திரபுரத்தில் உற்சவம்

கதிர்காமத்தில் நடந்த உற்சவங்கள்போன்ற உற்சவங்கள் கதிர்காமத்தில் நடந்த காலத்திலேயே உருத்திரபுரத் திருக்கோயிலிலும்சிறப்பாகநடைபெற்று நிறைவுற்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மைப்பக்தனுக்குண்டா ....

:0:

*1-ம்பக்கத் தொடர்ச்சி*

நான் எனது என்னும் அகங்கார மமகார எண்ணமும் ஆசையும் இறைவனிடம் பூரணமாய் ஒப்புக் கொடுத்தலுக்கு எதிரானவையாகும். இன்னல்களை நீக்க வேண்டுமென்று இறைவனிடம் வேண்டுதல் சமர்ப்பிக்க வேண்டாம் — வருகின்ற ஒவ்வொரு ஆபத்தையும் சகித்தற்கு வேண்டிய வலிமையை அவரிடம் வேண்டுங்கள்.

இன்னல்களால், இடைஞ்சல்களால் ஓர் உண்மையான பக்தன் பாதிக்கப் படமாட்டான். இவை எல்லாம் வினைப் பயன்களாய்க் கடவுளால் அனுப்பப் பெற்ற தூதுவர்களென்று கருதி வரவேற்கப் பெறுகின்றன. மிகப்பல இடைஞ்சல்களும் துன்பங்களும் ஓர் பக்தனுக்கு உண்டாகின்றன. உண்மைப் பக்தனுயுள்ளவனுடைய வினைப் பயன்கள் அனுபவிக்கப் பட்டு இப்பிறவியிலேயே அவன் இறைவனுடன் ஒன்றுபட வேண்டியவனயிருக்கின்றபடியால் அதிகமான இடைஞ்சல்களும் இன்னல்களும் அவனுக்கு உண்டாகின்றன. துன்பப் படவேண்டாம். முறுமுறுக்க வேண்டாம். இறைவனருளின்றி ஓர் இலைதானும் அசையமாட்டாது. இறைவன் திருவுளப்படி எது நிகழ வேண்டியதாயிருக்கின்றதோ அதுவே நிகழ்கின்றது.

உங்கள் சகிப்புத் தன்மையைக்கூட்டி இறைவன் மீது நம்பிக்கையை வளர்த்து உங்கள் மனங்களை அவர்பால் மேன் மேலும் இழுத்தற்பொருட்டே இன்னல்களும் இடைஞ்சல்களும் உங்களுக்குண்டாகின்றன. எவ்வளவுக்கு இன்னல்கள் இடைஞ்சல்கள் கூடுகின்றனவோ அவ்வளவுக்கு உங்கள் கடவுள் நம்பிக்கை கூடுகின்றது. தாங்க முடியாததாய் வரும் எல்லையற்ற துன்பமானது அளவற்ற நன்மையுடையதாயிருக்கும். அது உங்களைத் தெய்வத் தன்மை அடையச் செய்யும். ஆகையினுலே உங்களுக்கு வரும் இன்னல்களை வரவேற்று வாழுங்கள்.

நான் தேவரீரது உடைமை. எல்லாம் தேவரீரது உடைமையே தேவரீரது திருவுள்ளப்படி எல்லாம் நிகழ்கின்றன; நிகழட்டும் என்று மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் ஒருமித்து உங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது அவருடைய எல்லையற்ற கருணையைப் பெற்று ஈறிலா இன்பம் பெறுவீர்கள்.

(ஸ்ரீமத் சுவாமி சிவானந்தா அவர்கள் "டிவைன் லைப்" பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம்.)

### திருக்கேதீச்சரத்தில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

காலம் தொடங்க ஓர் சுப நாளில் விநாயகப் பெருமானையும், வள்ளி தேவசேனசமேத ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமானையும் பிரதிஷ்டை செய்யத் திருவருள் பாலிக்கும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

## இணுவில் கந்தசுவாமி கோவில்

### புதிய தர்ம கர்த்தா சபைத் தெரிவு 27-7-57

மேற்படி கோவிலுக்குரிய புதிய தர்மகர்த்தா சபை D. C. 395 T. &. S. C. 27/F 1956ம் இல. நீதி மன்றங்களின் தீர்ப் பின்படி அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கூடி, தெரிவு செய்யப்பட்டது. திருவாளர்கள்: சி. இளையதம்பி, வி. செல்வத்துரை கா. சின்னத்துரை, வ. சுப்பையா ஆகிய நால்வர் பொதுமக்கள் வழிபடுவோரால் தர்ம கர்த்தாக்களாகவும் திரு. ஆ. இராமுப் பிள்ளை அவர்கள் குழந்தையர் வேலாயுதர் வம்சா வழியினரால் தர்ம கர்த்தாவாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பஞ்சாயசபையினர் திரு. சி. இளையதம்பி என்பவரை தலைவராகத் தெரிவு செய்தனர். கோவில் ஆட்சிப் பொறுப்புக்களை துறப்புகளுடன் தலைவர் ஏற்றுக் கொண்டார். 13-8-57ல் இவர்கள் முகாமையில் ஸ்ரீ சண்முகப்பெருமானின் மஹா சங்காபிஷேகம் நடைபெறும்.

இங்ஙனம்
இ. திருநாவுக்கரசு
தர்மகர்த்தா சபை-
தேர்தற்கூட்டத் தலைவர்.
M 85 16-8-

## பிழை திருத்தம்

வெள்ளிக்கிழமை 9-8-57 ல் வெளிவந்த இந்துசாதன இதழில் 5-ம் பக்கத்தில் M. B 1174ம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தின் 3-ம் பந்தியில் தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 3952-50 இன்னும் ரூபா 5000 த்திற்கு 7-2-1957 தொடக்கம் என்பதில் ரூபா 5000 என்பது ரூபா 3000 எனத் திருத்தி வாசிக்கப்படுதல் வேண்டும்.

உ

## சைவ சித்தாந்த வகுப்பு

—0—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் நீண்ட காலம் சபை நாவலர் மண்டபத்தில் சித்தாந்த வகுப்பை நடத்தி வந்த பெரியார் திரு. சி. நாகையா B. A. அவர்கள் தமது உடல் நலச் குறைவால் சில மாதங்களாக ஷெ வகுப்பை நடத்த முடியாமற் போயிற்று. கடவுள் திருவருளால் அவருடைய தேகநிலை திருந்திவிட்டது. இனிமேல் சித்தாந்த வகுப்பை வழமைபோல சபை நாவலர் மண்டபத்தில் சனிக்கிழமைகடோறும் பி. ப 3 மணிக்கு ஆரம்பித்து நடத்துவார்கள். இப்பொழுது அவர் கற்பிக்கத் தொடங்கும் நூல் 'சிவஞானமாபாடியமாகும்' குறித்த வகுப்பிற் சேர விரும்புகின்றவர்கள் யாவரும் அழைக்கப் படுகின்றனர். அடுத்த சனிக்கிழமை (10-8-57) முதல் வகுப்பு ஆரம்பமாகும்.

சைவபரிபாலனசபை, — மு. மயில்வாகனம்,
யாழ்ப்பாணம், 31-7-57. — சமயப்பிரசார அமைச்சர்.

M 72 2, 9, 16-8-57.

## மரண அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்றெட்**

இல: 4, கண்டி ரோட், யாழ்ப்பாணம்.

பதிவு இல. M. 110

கீழ்க் காணும் மேற்படி சங்க அங்கத்தவர் மரணத் திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். **இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரண சேவைப் பணத்தைச் செலுத்தவும்.**

| இறந்தவர் இல. | இறந்தவர் பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 107 | செபஸ்தியன் நிக்கலஸ், | வைத்தியர் றெக்கிளமேசன், குருநகர் யாழ்ப்பாணம் | 7-8-57 |

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவ காரியதரிசி

M 87 16-8

# உங்கள் நக்ஷத்திரம்? — எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 18—8—57 —— 24—8—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி 1ம் பாதம், கார்த்திகை முதற்கால்.

தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. மனமும் அமைதியாயிருக்கமாட்டாது. செலவு மிகுதியாயிருக்கும். கண்டனங்களுக்கும் அவமானங்களுக்கும் இடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. சிறு அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். பணத்துறையில் நல்ல வாரம். குடும்பக்கருமங்கள் தொடர்ந்து தளப்பமாயிருக்கும். கந்தோரில் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

உம்முடைய சொந்தக்கருமங்களும் உத்தியோக கருமங்களும் இந்த வாரம் அதிகம் திருந்தும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். நெருக்கடி குறையும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

நண்பருடனும் இனத்தவர்களுடனும் இந்த வாரம் சண்டைகளுக்கிடமுண்டு. உமது மனம் தளப்பமாயிருக்கும். உம்முடைய கருமங்களில் பல இடைஞ்சல்களிருக்கும், இனத்தவர்கள்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

தேகசுகம் இந்த வாரம் பழுதுபடும், சுரம், கண்நோய், மனச்சலனம் ஆகியவற்றுக்கு இடமுண்டு. பணத்துறையில் நல்ல வாரம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தேகசுகம் இன்னமும் சிக்கலாயிருக்கும். மனச்சமாதானமிருக்கமாட்டாது. வேலை கூடுதலாயிருக்கும். வழக்கத்திலும் பார்க்க அதிகம் கூடுதலாய் நீர் செலவழிக்க வேண்டி வரும். இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர்கள் உமக்கு உதவி செய்வார்கள், வாரத்தின் முதல் நாள் கவனமாய்க் கழிக்க வேண்டும்,

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

திங்களும் செவ்வாயும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும், பண நெருக்கடிகளுக்கும் நண்பர்களிடையில்பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. குடும்பக் குழப்பங்களுக்கும் இடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேகசுகம் இன்னமும் சிக்கலாயிருக்கும். ஆனல் பணத்துறையில் ஒரு நல்ல வாரம். உம்மை முன்னிடுகின்ற எதிர்ப்புகளுட் பலவற்றை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். புதனும் வியாழனும் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

ஒரு தளப்பமான வாரம். பல அவமானங்களுண்டாகும்; குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. பிதாவழி இனத்தவர் உமக்கு அதிக கோபம் உண்டாக்கக்கூடும். கடைசி இருநாட்களையும் கவனமாய்க்கழிக்கவும்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

கந்தோர் நிலைமைகள் அதிகம் வெறுப்பானவையாயிருக்கும். உமக்குக் கீழ்வேலை செய்பவர்களுடன் அல்லது உம்முடைய மேலதிகாரிகளுடன் நீர் கோபிக்க வேண்டி வரலாம், சுகவீனங்களுக்கும் இடமுண்டு. ஆனல் என்னவும் ஆபத்தானதாயிருக்கமாட்டாது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பத் தொந்தரவுகளுக்கும் மனச் சலனங்களுக்கும் இடமுண்டு நீர் சில கண்டனங்களை முன்னிடுவீர். தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது, வார இறுதி சில நல்ல பலனைத்தரும். பெண்ணின நண்பர் அதிகம் உதவியாயிருப்பர்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

குடும்பச்சூழலிற் சண்டைகளுக்கிடமுண்டு, ஆனல் அவற்றை நீர் சமாதானமாய்த் தீர்க்ககூடியதாயிருக்கும். பகைவர் அழிவும் தனலாபமும் நிச்சயம், உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிறுப்பர்

Std 14

**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு கந்தர்மடம் செல்லப்பா சோமசுந்தரம்.

வழக்காளி

இல. 11482

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு இராமலிங்கம் நடராசா

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11482ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஹு புரட்டாதி மீ 21 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை :-

ரூபா 4635-ம் இன்னும் ரூபா 4000/- க்கு 3-8-54 தொடக்கம் 28-10-54 வரைக்கும் 6 வீதம் வட்டியும் அதன் பின்பு முழுத் தொகைக்கும் 28-10.54 தொடக்கம் இறுக்கும் வரையும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 150/—.

காணி விபரம்

வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை வாரி வளவு 8 1/2 பரப்பு, அளவின்படி 9 பரப்பும் குளி 8-ம் எல்லை கிழக்கு பசுபதிச் செட்டியாருக்கும் தில்லைநாதர் கைம்பெண் சுந்தரத்துக்குமுடைய ஆதனங்களும் V. வைத்திலிங்கத்துக்குடையவாதனமும், வடக்கு V. வைத்திலிங்கத்துக்கும் M,, பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் உடைய ஆதனங்களும் அம்பலவாண விநாயகமூர்த்தி பிள்ளையார் கோவிலுக்குமுடைய வாதனங்களும் மேற்கு T. அப்பாக்குட்டிக்குடையவாதனம், தெற்கு ஒழுங்கையும் கந்தையா பிள்ளையின் ஆதனமும். இக்காணி 1950 ஆ மாசி மீ 13-ந் திகதி நொத்தாரிசு மு, இ காராளசிங்கம் மூகதாவில் 1811-ம் இலக்கத்தில் ரூபா 5888-85 க்கும் 8 வீதம் வட்டிக்கும் மூன் ஈடாயிருக்கிறது. நவாலி தெற்கு தில்லையம்பலம் பெண் மமேஸ்வரி பேருக்கு ஈடு.

செ. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24, செப்பல் வீதி
யாழ்ப்பாணம்.
M 82 16-8-57

## ரெண்டர் விளம்பரம்

மானிப்பாய்க் கிராமச்சங்க அக்கிராசனரால் 1957-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணிவரை சுதுமலைக் கிணற்றிற்கு "சீல்"வைத்த ரெண்டர்கள் ஏற்றுக்கொளளப்படும்.

2 கேள்விகள் கிராமச் சங்கக் கந்தோரில் அதன் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும் அல்லது கிராமச்சங்கத் தலைவரின் விலாசத்துக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பவேண்டும் அல்லது 17-8-57 காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் கி. ச. கூட்டத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

3 கேள்விகள் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும். அப்பத்திரங்கள் அதன்பொருட்டு ரூபா இருபத்தைந்து பிணைக்கட்டப்பட்டதும் கி. ச. அக்கிராசனரால் 16-8-57 மாலை 2-00 மணி வழங்கப்படும்.

4 கேள்விகளில் உள்ள சகலமான மாற்றங்களும் அழித்தல்களும் கேள்விக்காரரின் கையொப்பத்தால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

5 அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று கிராமச்சங்க அக்கிராசனரால் அறிவிக்கப்பட்ட இரு வாரங்களுக்குள் ஒப்பந்தஞ் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்கத் தவறும் எக்கேள்விக்காரரதும் பிணைப்பணமான ரூபா இருபத்தைந்தும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

சி. சுப்பிரமணியம்
தலைவர்
கிராமச்சங்கம் மானிப்பாய்
மானிப்பாய்
8-8-57.
M 84 16-8-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புன்னாக்கட்டுவன் தற்காலம் கொழும்பு முகத்துவாரம்,
வைத்திலிங்கம்கந்தையா இராசரெட்டினம்

வழக்காளி

இல, MB 303

எதிராக

யாழ்ப்பாணம்கந்தர்மடம் செல்லையா சதாசிவம்பிள்ளை நவரெட்டினம்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 303 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக காணி 1957 ஹு புரட்டாதி மீ 17 உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்ளின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:முதல்வட்டி ரூபா 16333-30 இன்னும் ரூபா 12500/ 15-5-55 தொடக்கம் 0-8 55 வரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு 30-8-55 தொடக்கம் இறுபடும் வரையும் 5 வீத வட்டியும் இதில் ரூபா 1000 கழித்து மீதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை சுடலைப்பிட்டியும் மாவிலைக் கலட்டியும் உறுதிப்படி கி ப 5 ஆனல் கி. ப 4 குளி 10ம் வீடும்கிணறும் பயிர் வகைகளும்எல்லை கிழக்கு கைஒழுங்கை வடக்கு ரேட்டு மேற்கு சிவகடாட்சம் பெண் சௌந்தரநாயகியின் ஆதனம் தெற்கு குறித்த சௌந்தரநாயகிக்கும் வயிரவ கோயிலுக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24 சப்பல்வீதி
யாழ்ப்பாணம்
9-8-57,
M. 83 16-8-57.

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு 415 A காங்கேசந்துறை ரேட்டில் அடைவு பிடிக்கும் ஆ. வை. சு. நடராசா அன் கோ கடையில் 18-1-55 முதல் 2-8-56 முடிய அடைவு வைத்து மீட்கப்படாத அடைவு நகைகளை 7-9-57 சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை புறநீங்கலாக மீதி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

சி. பசுபதிச்செட்டியார்
வெந்தீஸ் மேஸ்தர்.
12-8-57.
M 86 16, 23-8-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரம்பன் மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை —வழக்காளி

இல. M. B, 648

எதிராக

1 கரம்பன் மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளையும்
2 ஷியூர் பெண் விக்டோரியாப்பிள்ளை

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 648-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள் 1957-ம் ஹு புரட்டாசி மீ 7-ந் திகதி சனிககிழமை முற்பகல் முறையே 9, 10, 11, 12 மணி தொடக்கமாய் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 3277-33 சதமும் ரூபா 2000 க்கு 18-11-55 தொடக்கம் 24-1 56 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-08 சதம், வட்டியில் ரூபா 1000 ம் 1956-ம் ஹு ஆடி மாசத்திலும் கோட்டுச் செலவில் ரூபா 125-ம் கொடுபட்டது.

காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற் பற்று கரம்பனிறை "பத்தன் கலடு" பர நெ இல. பதின்மூன்று (13) குழி 1/4 வீடும் கிணறும் எல்லை கிழக்கு சவரிமுத்து பெண் நேசம்மாவிற்குரியவாதனம் வடக்கு அந்தோனிப்பிள்ளை பெண் மரியப்பிள்ளைக்குரிய வாதனம் மேற்கு சவரிமுத்து பெண் நேசம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் தெற்கு பிலிப்புப்பிள்ளை சூசைப்பிள்ளைக்குரியவாதனம். இதடங்கலும். இதன் பதிவு C 172/97,

2 ஷியிறை "தணுவில் உயரத்தணுவில் பத்தனதணுவில்" 'பர நெ இல (12) பன்னிரண்டு எல்லை கிழக்கும் தெற்கும் பிலிப்புப்பிள்ளை சூசைப்பிள்ளைக்குரிய வாதனம் வடக்கு தம்பு பெண் அன்னம்மாவிற்குரியவாதனம் மேற்கு ஒழுங்கையும் பிலிப்புப்பிள்ளை சூசைப்பிள்ளைக்குரியவாதனமும் இதடங்கலும் தெற்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றிவிதற்குரிய தண்ணீர்ப் பங்கும் தூர்வை வழி வாய்க்காற் பாவிப்புரித்தும். இதன் பதிவு C 258,184.

3 ஷி நாரந்தனை இறை "கள்ளியந்தோட்டத்தில்" நெ. பர. இருபத்தைந்தும் பனைகளும் எல்லை கிழக்கு வாய்க்கால்வடகக்கு சூசைப்பிள்ளை பெண் மரியைப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு சூசைப்பிள்ளை பெண் யோசேப்பினுவுக்கும் மறுபேருககுமுரிய வாதனங்கள். தெற்கு மரியாம்பிள்ளை பெண் ஆரோக்கியத்தினுதனம். இதடங்கலிற் சொரியலாய் ¼ நாலிலொரு பங்கு. இதன் பதிவு C 258/185.

4, ஷி இறை "கள்ளியந்தோட்டம்" பர. நெ. இல. 5 3/8 ஐந்தேகாலேயரைக்கால் எல்லை கிழக்கு வயித்தியாம்பிள்ளை பெண் அந்தோனியாப்பிள்ளையினுதனம், வடக்கு சதாசிவம் கைம்பெண் பராசத்திக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் மேற்கு மனுவேற்பிள்ளை பெண் எலிசபேத்துவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு சவிரிமுத்து பெண் சிசிலியாப்பிள்ளையினுதனம். இதடங்கலும் இதன் பதிவு C 181/45,

1957-ம்ஹு ஆவணிமீ 1-ம்திகதி
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 88 16-8-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 926

1 மொகிடீன் தம்பியமால் மொகமேட் மனைவி றகுமத்தம்மா.
2 ஆசன்ன மரக்காயர் அபுபக்கர் மனைவி மொகமேட்உம்மா.
3 மொகமேட் சூல்த்தான் மொகமேட் மொகிடீன் மனைவி உமாசல்மா.
4 சூல்த்தான் அப்துல்காதர் சகுல் கமிட் மனைவி மொகமேட் ஐசா உம்மா,
5 மொகடீன் லவா மனைவி செய்னுபு நெச்சியா எல்லோரும் வண்ணார்பண்ணை மேற்கு

வழக்காளி

1 மொகமேட் மொகிடீன் மொகமெட் சூல்த்தான் அப்துல் காதரும் மனைவியும்
2 சவ்று உம்மா,
3 மொகிடீன் அப்துல் காதர் பகீர் மீரு லெப்பே மனையும்
4 பாத்தும்மா நாச்சியா எல்லோரும் வண்ணார்பண்ணை மேற்கு

எதிராளி

யாள்ப்பாணம் பெரிய கோட்டின் M B 926ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்சொல்லிய எதிராளி வழக்காளிக்கு ரூபா ஆயிரத்து அறுநூற்று ஐம்பது. ரூபாய் ஆருயிரத்துக்கு 24-5-56 தொடககம் 12-7-57 வரையும் 10 வீத வட்டியும் அதன்பின் கூடிய முழுத தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும் இறுக்கவேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை மேற்கு கோவிற்பற்று ஆனைவிழுந்தான் என்னுங்காணி உறுதியின்படி 1 பரப்பும் 14 1/2 குளியும். ஆனல் தற்போது இருப்பது 2 பரப்பு இதில் புதிதாக அமைக்கப்பட்ட வீடும், நல்லாகப் பயிரிடப்பட்ட சுவேச்சையான தோட்டமும். எல்லை கிழக்குரேட்டு, வடககு மீரா லெப்பி மரக்கார் ஆதனமும் மேற்கு மொகமெட் சூல்த்தான் மொகடீன் மீராப்பிள்ளையின் உரிமையும் தெற்கு மொகடீன் சகிப் மொகமேட் மீராப்பிள்ளை இதடங்கலும் பதிவு இலக்கம் D 182/13.

இ. கனகரேத்தினம்
கொம்மிஷனர்
R. Kanagaratnam
Commissioner of Sales
No. 35 Chundikuli
Jaffna
M 81 16-8

## யாழ்ப்பாணம் மாநகரசபை

யாழ்ப்பாண மாநகர சபை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலைக்கு மருந்துகளை விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணம் மாநகர சபை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலைக்கு மருந்து வகைகளை விநியோகிப்பதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.


2. வைத்தியசாலைக்குத்தேவையான மருந்தின் விபரங்களை எமது கந்தோரில் நேரில் அறிந்து கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் கடுதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டு, அரக்கு முத்திரை யிடப்பட்டு, மாநகரசபைகொமிஷனர், யாழ்ப்பாணம் என்ற விலாசமிடப்பட்டு, 1957 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் எமது காரியாலயத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் மருந்துகளைக் கொடுப்பதற்குத் தயாராகஇருக்க வேண்டும்,

5. மேல் விபரங்களை எமது கந்தோரில்அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம் :
ஆ. வ. சின்னையா
மாநகரசபைக கொமிஷனர்.
மாநகரசபை கந்தோர்,
யாழ்ப்பாணம், 10-8-57,
G 9 16 8-57




வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 16-8-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org